# காலை முரசு

பக்கங்கள்:-19

## தேர்தல் தொடர்பில் 4,628 முறைப்பாடுகள்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் மே மாதம் 4ஆம் திகதி 4,628 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு 07

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 24 | செவ்வாய்க்கிழமை | 06.05.2025 | அதிர்வு 275

# தேசிய மக்கள் சக்தியின் நெடுந்தீவு பிரதேச சபை வேட்பாளர் மீது தாக்குதல்

### காயங்களுடன் வைத்தியசாலையில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மீதும், கட்சியின் மூத்த உறுப்பினர் மீதும் நெடுந்தீவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்கான பணிகளில் அவர் ஈடுபட்ட பின்னர் நேற்று இரவு வீட்டுக்குத் திரும்பிய வேளை வீட்டின் அருகில் மறைந்திருந்தோர் பாரிய ஒளியை வீசி வேட்பாளர் மீது பொல்லுகளால் தாக்குதல் நடத்தினர் எனவும், அதனைத் தடுக்கச் சென்ற கட்சியின் மூத்த உறுப்பினர் மீதும் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 03



# இன்று குட்டித் தேர்தல்!

### காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிக்க முடியும்




**உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.**

**வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்றும், வாக்களித்ததன் பின்னர் அமைதியாக வீடுகளுக்குச் செல்லுங்கள் என்றும், நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை முறையாகக் கடைப்பிடியுங்கள் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.** 07

# இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் பல்வேறு துறைகள் சார்ந்த நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஒரு இணக்கப்பாட்டு ஒப்பந்தமும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

வியட்நாம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, வியட்நாம் சோசலிசக் குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையே சுங்க விவகாரங்களில் 08






சில தினங்களுக்கு முன்னர் தமிழர் தரப்பில் வயதில் மூத்த இரு தலைவர்களின் சந்திப்புப் பற்றிய படம் ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இது 'பழசுகளின்' சந்திப்பு என்று வாசகர்கள் அதை அதிகம் கவனிக்காமல் விட்டிருக்கலாம். ஆனால் அதில் அரசியல் சம்பந்தமான ஒரு விடயம் இருப்பதால் அது பற்றி இன்று குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

சந்தித்தவர்கள் வீ.ஆனந்தசங்கரி மற்றும் சி.வி.கே.சிவஞானம். சங்கரிக்கு வயது 93. சி.வி.கேக்கு 85க்கு மேல்.

வயது மூப்பு என்பது மட்டுமல்ல, வேறு அம்சங்களிலும் இருவருக்கும் இணையான விடயங்கள் உண்டு. ஒருவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர். மற்றவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்.

இருவருமே இன்று இரு வெவ்வேறு கட்சிகளின் தலைவர்களாக இருந்தாலும் முன்னர் இருவரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்தவர்கள் என்ற ஒரு நிலைப்பாடு 06




# வவுனியா கணேசபுரத்தில் திருட்டுப் போன ரூ. 80 லட்சம் பெறுமதியான நகைகள் மீட்பு

## நெளுக்குளம் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(கி.வசந்தன்)

வவுனியாவில் திருட்டுப் போன 80 லட்சம் ரூபா பெறுமதியான 35 பவுண் தங்க நகைகளைத் தாங்கள் மீட்டுள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக வவுனியா, கணேசபுரம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன.

இச் சம்பவம் தொடர்பில் நெளுக் குளம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதி காரி டி.எம்.ஏ.சமரகோன் தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் எல்.எஸ்.வீரசிங்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான நிரோஜன் (8137), தீபன் (80998) அடங்கிய குழுவினரால் விசேட நடவடிக்கை



முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பில் வவுனியா, கொக்குவெளி பகுதியில் வைத்து 29 வயது இளைஞன் ஒருவரைக் கைது செய்தமையுடன், அவரிடம் இருந்து 35 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் வவுனியாவில் 74 முறைப்பாடுகள்



(கி.வசந்தன்)

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் இதுவரை 74 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வவுனியாவில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நேற்றுக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன. இதுவரை எந்தவித குழப்பங்களும் இன்றி அமைதியான முறையில் தேர்தல் செயற்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

இதுவரைக்கும் 74 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. – எனத் தெரிவித்தார்.



# சிக்கன்குனியா பரவும் அபாயம்

தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு மற்றும் சிக்கன் குனியா பரவும் அபாயம் அதிகம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

டெங்குவைப் பரப்பும் அதே நுளம்புகள் மூலமே சிக்குன் குனியா பரவுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டில் இலங்கையில் 17,816 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்தே பதிவாகியுள்ளனர்.

கடந்த மாதத்தில் மட்டும் நாட்டில் 5,175 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2023ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏப்ரல் மாதத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான மாதமாக இது பதிவாகியுள்ளது.

சிக்கன்குனியாவினதும் முதன்மை அறிகுறி காய்ச்சலே என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலையில் காயமடைந்த வேட்பாளர், நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கட்சியின் மூத்த உறுப்பினரும் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய மக்கள் சக்தியின் நெடுந்தீவு பிரதேச சபை வேட்பாளர் முருகேசு அமிர்தமந்திரன் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர் அ.கணபதிப்பிள்ளை ஆகியோரே தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# மேலும் 19 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில், நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் வன்முறை சம்பங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், 8 வேட்பாளர்கள் மற்றும் 5 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தேர்தல் தொடர்பில் 568 முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

இவற்றில் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 116 முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 452 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அதேநேரம் 54 வேட்பாளர்கள் மற்றும் 204 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 46 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.



# பல்கலை மாணவன் உயிரிழப்பு; மேலும் 4 மாணவர்கள் சரண்

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், அந்த பல்கலைக்கழகத்தின் மேலும் 4 மாணவர்கள் நேற்று சமனல வெவ பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த 4 சந்தேகநபர்களான மாணவர்களும் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

மேலும், மாணவனின் மரணம் தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மாணவர்கள் நால்வரும், பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்காக 65,000 இற்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நிலையங்கள், வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மொத்தமாக 73,000 இற்கும் அதிகமான பொலிஸார் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாருக்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 2,337 பேரும் பாதுகாப்புப் பணிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவசர தேவைகளின்போது, ஒத்துழைப்பை வழங்குவதற்காக முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 9,906 பேர் பாதுகாப்பு ஒத்துழைப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்குப் பின்னர் ஏதேனும் வன்முறைகள் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்காக கலகமடக்கும் பொலிஸாரும் தயார் நிலையில் உள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# சாமர சம்பத் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு!



ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவைக் காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மேர்வின் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கிரிபத்கொடை பகுதியில் அரசுக்குச் சொந்தமான காணியைப் போலி ஆவணங்களைத் தயாரித்து தனியாருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முன்னாள் அமைச்சர் சில்வா உட்பட மூவரை மே மாதம் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்குடன் தொடர்புடைய முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் மில்ராய் பெரேரா ஆகியோருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, மஹர நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அடுத்த விசாரணையின்போது இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அரசுக்குச் சொந்தமான காணி ஒன்றை போலி ஆவணங்களைத் தயாரித்து தனியாருக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்டு. இது பற்றிய சில விடயங்களில் நான் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால் அவை பற்றி இங்கு பிரஸ்தாபிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஆனந்தசங்கரி என்னிலும் விட அதிகம் வயதில் மூத்தவர். 80 களில் இருந்து அவருடன் எனக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. அவர் ஆரம்ப காலத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஒரு தூண். அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு கிளிநொச்சியில் இருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவானவர். எனினும் தந்தை செல்வநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தபோது அதனோடு இணைந்து கொண்டவர். தலைவர் சிவசிதம்பரம் காலமான பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்தசங்கரி அதனைத் தொடர்ந்து தன் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்.



சி.வி.கே.சிவஞானம் ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர். ஆகையினால் அவர் காங்கிரஸ்காரர் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. அது பற்றிய விடயத்துக்குள் இறங்க முன்னர் ஒரு சிறிய 'பிளாஷ் பேக்' நிலைப்பாட்டை குறிப்பிடுவது அவசியமாகின்றது.

எண்பதுகளின் நடுப்பகுதிகளில் குடாநாடு பொலிஸார் மற்றும் படையினரின் கைகளில் இருந்து மெல்ல மெல்ல போராளிகள் கைக்கு மாறியது. 86 இல் யாழ். குடாநாட்டின் பெரும் பகுதி தனித்துப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. 87 ஒக்டோபர் அளவில் இந்திய அமைதிப்படை படை தன் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரைக்கும் நிலைமை அப்படித்தான் இருந்தது.

90 முற்பகுதியில் இந்தியப் படை வெளியேறிய போது குடா நாடு முழுமையாக பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. 96 இல் குடாநாட்டைப் படையினர் முற்றாகக் கைப்பற்றும் வரை இந்த நிலைமை நீடித்தது.

இந்தப் பின்புலத்தில் என் நினைவு சரியாக இருக்குமானால் 2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

1985 லிருந்து அப்போதைய யாழ் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானத்தை நான் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் ரொம்பவும் அறிந்திருந்தேன். எங்கள் பத்திரிகை அலுவலகத்திலும், அவரது மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்திலும், பிற இடங்களிலும் அவரை அடிக்கடி சந்திப்பது உண்டு. இந்தியப் படைகளின் காலத்தில் நான் பணியாற்றிய பத்திரிகைக்கு அவர் செய்த பங்களிப்பு பல.

நெருக்கடி சமயங்களில் எங்களோடு நின்றவர். இந்தியப் படைகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு வல்வெட்டித்துறையில் கிட்டம்மாவின் வீட்டிலும் பிற இடங்களிலும் நானும் அவரும் புலிகளின் மாவட்டத் தளபதிகளை இரகசியமாகச் சந்தித்த பல சந்தர்ப்பங்கள் உண்டு.

இந்தியப் படை வடக்கில் தனது இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கிய போது இங்கு மக்கள் பிரதிநிதிகள் என்று யாரும் இருக்கவில்லை. மாநகர சபை ஆணையாளர் சிவஞானமே மக்களின் பிரதிநிதியாக இந்தியத் தரப்போடும் நெருக்கடியான பல விடயங்களை கையாள வேண்டியவராக இருந்தார். அவை பற்றி எழுதுவதாயின் அது நீண்ட கதையாகிவிடும். அதனால் விட்டு விட்டு விடுகிறேன்.

ஆயினும் எனக்குத் தெரிந்தவரை வடக்கில் யுத்த மேகங்கள் சூழ்ந்த எண்பதுகளின் முற்பகுதியில் இருந்து, இன்று வரை மண்ணில் நின்று, நிலைத்து, நீடித்து, குரல் எழுப்பி வரும் ஓரிருவரில் அவரும் ஒருவர். இயக்கங்களினாலும், அரச ஆதரவு குழுக்களினாலும், இரண்டு தடவைகள் உயிராபத்தை ஏற்படுத்துகின்ற துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு அவர் இலக்கான போதும், பிற நெருக்கடிகள், நெருக்குவாரங்களை எதிர்கொண்ட போதும், அவர் மண்ணை விட்டு ஓடாதவர். தம் மண்ணின் மீதும், நல்லூர் முருகனின் மீதும் அவர் கொண்ட பற்றும் பாசமும் பக்தியும் அவரை இந்த மண்ணோடு கட்டிப்போட்டிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன்.

இந்தச் சமயத்தில்தான் 2001 டிசம்பர் பொதுத்தேர்தல் வந்தது. அப்போது யாழ்ப்பாணக் குடா நாடு இராணுவத்தின் முழுக் கெடுபிடிக் கட்டுப்பாட்டில் இருந்தது. இராணுவம் யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டமையால் அது வரை ஒரு தசாப்த காலம் யாழ் மண்ணை மிதிக்காத நம் அரசியல் தலைவர்கள் எல்லோரும் இங்கு வரத் தொடங்கிவிட்டனர்.

வன்னியில் இருக்கும் புலிகள் 0088 என்ற சர்வதேச இலக்கத்தில் தொடங்கும் 'துரையா' தொலைபேசிகள் மூலம் அச்சமயத்தில் குடா நாட்டில் இருந்த தரைவழி தொலைபேசிகளுக்கு அழைப்பு எடுப்பார்கள். படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாண மக்கள் அந்தத் தொலைபேசி அழைப்புகள் வந்தாலே குலை நடுங்குவார்கள். புலிகளின் தொடர்பு இராணுவப் பாய்ச்சலுக்கு இடமளிக்கும் என்ற அச்சம் பலருக்கும். ஆயினும் பத்திரிகையாளன் என்ற முறையில் இத்தகைய தொடர்பாடல்களை நான் தவிர்ப்பதில்லை. அநாயசமாக எதிர் கொண்டு வருவேன். அந்த வகையில் வன்னியில் இருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான தமிழ்ச்செல்வன், பொட்டம்மான், நடேசன், சூசை போன்றவர்கள் அடிக்கடி எனது பத்திரிகை அலுவலகத்திற்கும் என் வீட்டிற்கும் தொலைபேசி அழைப்பு எடுப்பார்கள். செய்திகள் பற்றி பேசுவார்கள். புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைப் பொறுத்த வரை யாழ்ப்பாணத்து நிலைமைகளை அறியும் ஒரு செய்தித் தொடர்பாளராக நான் இருந்தேன். ஒரு வகையில் யாழ்ப்பாணத்தில் மக்களின் கருத்துருவாக்கிகளாக நாங்கள் இருந்த காலம் அது. அதனால் எங்களின் தொடர்பு புலிகளுக்கும், புலிகளின் தொடர்பு எங்களுக்கும் அவசியமாக இருந்தன.

அந்தச் சமயத்தில்தான் புலிகளின் ஏற்பாட்டில் அல்லது பின்புலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவெடுத்து இருந்தது. 2001 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்றவற்றை இணைத்து தமிழ்க் கூட்டமைப்பு முதல் தடவையாக களமிறங்கத் தயாராயிற்று. அச்சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக சங்கரி இருந்தார் என்று நினைப்பு. புலிகளுக்கும் சங்கரிக்கும் இடையில் அப்போதே நெருடல் அரசல் புரசலாகத் தொடங்கிவிட்டது.

அச்சமயத்தில்தான் 2001 தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. கூட்டமைப்பின் தேர்தல் தயாரிப்பு வேலைகளில் எனக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. ஆயினும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டு ஊடாடி, அவை பற்றிய செய்திகளை நாங்கள் வெளியிட்டு வந்தோம். அந்த வகையில் நான் தமிழ்ச்செல்வனோடும் அடிக்கடி பேசி வந்தேன்.

யாழ்ப்பாணப் புதினங்களை அறிவதற்காக தமிழ்ச்செல்வன் தாமாக அடிக்கடி தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசுவார்.

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் அணிக்கு ஆனந்தசங்கரி தான் தலைவர். தலைமை வேட்பாளர். அவர்தான் கூட்டணியின் தலைவரும் கூட. கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் சி.வி.கே.சிவஞானத்திற்கு இடம் கொடுப்பதில்லை என்பதில் சங்கரி உறுதியாக இருந்தார் என நான் அறிந்து கொண்டேன். அதில் சி.வி.கே.சிவஞானத்திற்கும் மனத்தாங்கல் என்று எனக்குத் தெரிய வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பற்றி என்னோடு பேசினார். நான் அவருக்கு ஒரு முறைப்பாடு மாதிரி இந்த விடயத்தைச் சொன்னேன்.

அது பற்றி சிவஞானம் எனக்கு எதுவும் சொல்லவில்லை. ஆனால் நான் நானாகவே அந்த முறைப்பாட்டை தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தேன்.

“தம்பி... நீங்கள் போடுகின்ற அல்லது உங்கள் வழிகாட்டலில் தெரிவாகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் யாரும் 85 லிருந்து இதுவரையான காலத்தில்

07

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாண மண்ணில் நின்று பிடித்தவர்கள் அல்லர். ஆனால் சிவஞானம் இந்த மண்ணில் தொடர்ந்து நின்றவர். உங்களுக்கு ஆதரவாக நின்றமைக்காகவே இரண்டு தடவைகள் உயிராபத்து ஏற்படக்கூடிய விதத்தில் சுடப்பட்டவர். அருந்தப்பில் தப்பியவர். திலீபனுக்கு நினைவுத்தூபி இன்று இருக்கும் இடத்தில் அவரே கட்டினார். அதனால்தான் அது கட்டித் திறந்து சில தினங்களில் அவர் இரண்டாவது தடவையாக சுடப்பட்டார். ஆனால் அவர் இந்த மண்ணை விட்டு ஓடவில்லை. உங்களின் இயக்கம் ஜே.ஆரோடு முரண்படுவதற்காக – முரண்டு பிடிப்பதற்காக – நீங்கள் கேட்டதும் இடைக்கால நிர்வாக சபை தலைவர் பதவியை தாமாக விரும்பி ராஜினாமாச் செய்தவர். உங்களின் நெருக்கடி காலத்தில் உங்களோடு நின்றவர். அவரை நான் தனி சிவஞானமாகப் பார்க்கவில்லை. இந்த நெருக்கடி காலத்தில் மக்களோடு நின்ற ஒருவராகப் பார்க்கிறேன். நீங்கள் இப்போது நிறுத்துகின்ற மாவை சேனாதிராஜா உட்பட எல்லோருமே நெருக்கடி காலத்தில் இந்த மண்ணை விட்டு ஓடியவர்கள். அவர்களுக்கு இடம் அளித்து சிவஞானத்துக்கு இடமளிக்காமல் விடுவது இந்த மண்ணில் நின்றவர்கள் அனைவரையுமே அவமதிக்கும் செயற்பாடு." – என்ற சாரப்பட நான் ஒரு டோஸ் கொடுத்தேன்.

"கொஞ்சம் பொறுங்கள் அண்ணே. சற்று நேரத்தில் உங்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கிறேன்." – என்று சொல்லிவிட்டு தமிழ்ச்செல்வன் தொலைபேசியை வைத்தார்.

அன்றோ அல்லது அடுத்த நாளோ அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு மீண்டும் வந்தது.

"அண்ணே யாழ்ப்பாணத்தில் போடுகின்ற பட்டியலுக்கு தலைவர் சங்கரிதான். எங்களுக்கு சங்கரியரோடு ஒத்துப் போகின்ற நிலைமை இல்லை. அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டியலில் சிவஞானத்துக்கு இடமளிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். அவரோடு இந்தச் சமயத்தில் முரண்டு பிடித்து குழப்புவது பொருத்தம் இல்லை. என்ன செய்யலாம்?" – என்று பந்தை என் பக்கத்துக்கு அடித்தார் தமிழ்ச்செல்வன்.

நான் ஒரு மாற்று யோசனையை முன் வைத்தேன்.

"சிவஞானம் இந்த மண்ணில் நின்றவர். நிற்பவர். அவருக்கு இடம் கொடுக்குமாறு தமிழ் காங்கிரஸை நாங்கள் ஏன் கேட்கக் கூடாது?" – என்று நான் ஒரு யோசனை கூறினேன்.

"நல்ல ஐடியா அண்ணே! எதுக்கும் நீங்கள் திருமதி குமார் பொன்னம்பலத்தோடு நான் கூறியதாக குறிப்பிட்டு இந்த விடயத்தை பேசுங்கள்.

எங்கள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பரணியையும் திருமதி குமார் பொன்னம்பலத்தோடு பேசுமாறு நான் கேட்கிறேன்." – என்றார் தமிழ்ச்செல்வன்.

அப்போதெல்லாம் தமிழ் காங்கிரஸ் தொடர்பான முடிவுகளை கட்சியின் தலைவர் விநாயகமூர்த்தியோ அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ எடுப்பதில்லை. விடயங்கள் பெரும்பாலும் திருமதி குமார் பொன்னம்பலம் அவர்கள் மூலமே தீர்மானிக்கப்பட்டன. குமார் பொன்னம்பலம் காலத்தில் இருந்தே திருமதி குமார் பொன்னம்பலத்தை நான் நன்கு அறிவேன். தமிழ்செல்வன் சொன்ன யோசனையை அவரோடு தொடர்பு கொண்டு நான் பேசினேன். ஆரம்பத்தில் அவருக்கு அதில் விருப்பம் இருக்காவிட்டாலும், புலிகள் கேட்கின்றமையால் அதற்கு விட்டுக் கொடுக்க அவர் இணங்கினார். என் நினைவு சரியென்றால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விநாயகமூர்த்தி ஆகிய இரண்டு பேருக்கு மேல் மூன்றாவது காங்கிரஸ் வேட்பாளராக சிவஞானத்தை நியமிக்க அவர் இணங்கினார்.

தமிழ்ச்செல்வனின் வழிகாட்டலில், மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பரணியும் வன்னியில் இருந்தபடி திருமதி குமார் பொன்னம்பலம் மற்றும் சிவஞானத்தோடு தொடர்பு கொண்டு விடயங்களை ஒழுங்குபடுத்தினார். பரணி இப்போதும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். நான் நினைக்கிறேன் இந்தத் தகவல்களை அவரும் உறுதிப்படுத்துவார்.

நான் சிவஞானத்தோடு தொடர்பு கொண்டு தமிழ்ச்செல்வன் சொன்ன தகவல்களைக் கூறி, பரணி அவரோடு தொடர்பு கொள்வார் என்பதையும் தெரிவித்தேன். அதன் பின்னர்தான் சிவஞானம் காங்கிரஸ் தரப்பினருடன் – திருமதி குமார் பொன்னம்பலம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோருடன் – தொடர்பாடல்களை ஆரம்பித்தார்.

வேட்பு மனுக் கையெழுத்து வைப்பதற்காக சிவஞானம் சென்றார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் யாழ். ஸ்ரான்லி வீதியில் இருந்ததாக நினைப்பு. அங்கு மாவட்ட வேட்பாளர் குழுத் தலைவர் சங்கரிக்கு முன்னால் மேசையில் வேட்புமனுப் பத்திரம் இருந்தது. காங்கிரஸின் பிரதிநிதியாக வேட்பு மனுவில் கையெழுத்து வைக்க வந்த சிவஞானத்தை ஏறெடுத்துக் கூட சங்கரி பார்க்கவில்லை. தான் எதிர்த்தும், தன்னை மீறி வேறு கட்சியூடாக சிவஞானம் வேட்பாளர் பட்டியலுக்குள் வந்துவிட்டார் என்ற எரிச்சல் சங்கரிக்கு. ஆனால் அது சிவஞானத்தின் வேலை அல்ல, நான் பண்ணிய நகர்வு என்பது சங்கரிக்கு இன்று வரை தெரிந்திருக்காது.

யாழ்ப்பாணத் தேர்தலில் வேட்பாளராக சிவஞானத்தைக் களம் இறக்குவதற்கு அவரைக் கொண்டு போய் காங்கிரஸ் கட்சியோடு சொருகியதில் எனக்கு அதிக பங்களிப்பு உண்டு. இப்போது எஞ்சி இருப்போரில் பரணியும் அதில் ஒருவர் என்று சொல்லலாம்.

அந்தக் கட்சியின் வேட்பாளராக அந்தத் தேர்தலில் போட்டியிட்ட காரணத்தினால் அந்தத் தேர்தலை ஒட்டிய காலத்திலும் அதற்குப் பின்னரான சொற்ப காலமும் காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களில் சிவஞானம் பங்குபற்றினார் என்பது உண்மைதான். ஆனால் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அவர் என்று கூறுவது பொருத்தமற்றது.

அன்று சிவஞானத்தை ஏறெடுத்துப் பார்க்க மறுத்த சங்கரி, பிற்காலத்தில் பொது இடங்களில் அவ்வப்போது சிவஞானத்தை கண்டால் உரையாடுவார். சிரிப்பார். அவ்வளவுதான். அவர்கள் இருவரும் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றாக சந்தித்துப் பேசியமை நல்ல ஒரு திருப்பம் என்று நினைக்கிறேன்.

சிவஞானத்துக்கும் காங்கிரஸுக்கும் தொடர்பில்லை என்ற பின்னணியையும், உண்மையில் என்ன நடந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவதன் மூலம் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருக்கும் சிவஞானம் அந்தக் கட்சியின் உருவாக்கம் மட்டுமே என்பதை உறுதிப்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். அதனால்தான் இந்தப் பதிவு.

## இன்று குட்டித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"339 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு செவ்வாய்க்கிழமை (இன்று) காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளவர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு தனக்கான பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. இனி உங்களின் பொறுப்பை நிறைவேற்றுங்கள்.

சுதந்திரமானதும் நீதியானதுமான வகையில் தேர்தலை நடத்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படும். உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

வாக்களிப்பு நிலையத்தினுள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தல், படம் எடுத்தல், காணொளிகளைப் பதிவு செய்தல், ஆயுதங்களை வைத்திருத்தல், புகைப் பிடித்தல், மதுபானம் அருந்துதல் அல்லது போதைப்பொருட்கள் உபயோகித்தல், மதுபானம் அருந்திவிட்டு அல்லது போதைப்பொருள்கள் பாவனையுடன் வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்லுதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் விரும்பிய கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு எதிரே ஒரு புள்ளடியை மாத்திரம் இட்டு வாக்கைப் பதிவு செய்ய வேண்டும்.

வாக்களித்ததன் பின்னர் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அருகில் நடமாடுவதைத் தவிர்த்து அமைதியான முறையில் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கை நாட்டு மக்கள் அனைவரும் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் முழு வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆகவே, அவதானத்துடன் செயற்பட வேண்டும்." – என்றார்.

## தேர்தல் தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 284 முறைப்பாடுகளும், ஏனைய விடங்கள் தொடர்பில் 309 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.





## இலங்கைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

வியட்நாமின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையிலான இயந்திர உற்பத்தி ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாம் விவசாய விஞ்ஞான அகாடமிக்கும் இலங்கை விவசாயத் திணைக்களத்துக்கும் இடையிலான விவசாய ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்துக்கும் வியட்நாமின் இராஜதந்திர அகாடமிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் வியட்நாம் வர்த்தக ஊக்குவிப்பு முகவர் நிறுவனத்துக்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.


இந்த ஒப்பந்தங்கள் மூலம் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளல், இராஜதந்திரிகள், நிபுணர்கள்,அதிகாரிகள், வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றம் அதேபோன்று, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சிகள், பல்வேறு பாடநெறிகள், கருத்தரங்குகள், இராஜதந்திரத் துறையில் ஏனைய கல்வி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி தொடர்பான நிபுணத்துவத்தை ஒழுங்கமைக்கவும் பரிமாறிக்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தரப்பினருக்கும் பொருத்தமான வர்த்தகத் தகவல் மற்றும் சந்தை நுண்ணறிவு பரிமாற்றம், இரு நாடுகளிலும் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு வாய்ப்புகளில் கூட்டு பங்கேற்பு மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுக்கு இடையே சந்திப்புகளை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட பரந்த அளவில் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்வேறு வகையான வாய்ப்புகளை வழங்கும்.

இந்த இணக்கப்பாடுகள் ஊடாக குறிப்பாக பதப்படுத்தப்பட்ட உணவுகள், கடற்றொழில் நடவடிக்கைகள், ஆடைக் கைத்தொழில் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட விவசாயத்துக்குக் குறிப்பிடத்தக்க சந்தை வாய்ப்புகளை இரு நாடுகளுக்கும் வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முட்டாள் நிர்வாகம்

இலங்கை நாட்டில் இப்போது இரண்டு விவகாரங்களில் 'பயங்கரவாதம்' கொடிகட்டிப் பறக்கின்றது. அவற்றைத் தடுத்து நிறுத்தும் திராணியோ, திறமையோ இந்தப் பேரினவாத மேலாதிக்க அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஒன்று - தினசரி நாட்டில் நடக்கும் துப்பாக்கிச் சூடுகள். கொலைக் கலாசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. போதைப் பொருள் கும்பல்களினதும் பாதாள உலகக் குழுக்களினதும் கைவரிசை எல்லை மீறி விட்டது.

அடுத்த பயங்கரவாதம் - நாட்டின் உயர் கல்விக்கூடங்கள் என்று கூறப்படும் பல்கலைக்கழகங்களில் கட்டவிழ்கின்றது. றாகிங் என்ற பெயரில் மனித நாகரிகத்திற்கே ஒவ்வாத காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் பல்கலைக்கழகங்களில் இடம்பெறுவது இலங்கையின் வரலாற்றுத் துரதிர்ஷ்டம்.

இலங்கையைப் பொறுத்த வரை சட்டம், ஒழுங்கை பேணவேண்டிய பொலிஸ் நிலையங்களும், உயர் கல்வியைப் போதிக்க வேண்டிய பல்கலைக்கழகங்களும் சித்திரவதைக் கூடங்களாக மாறி இருக்கும் பேரவலம்.

ஒருபுறம் போதைப் பொருள் கும்பல்களினதும் பாதாள உலகக் குழுக்களினதும் பயங்கரவாதம் என்றால், மறுபுறம் கல்வியைப் போதிக்க வேண்டிய பல்கலைக்கழகங்களில் காட்டுமிராண்டித்தனம் பயங்கரவாதமாகக் கட்டவிழ்கின்றது.

நீதி, நியாயமான, அமைதியான, சமாதானமான, நல்லிணக்கமான சமுதாயத்தை நாட்டில் இந்த அரசு பேண வேண்டுமானால் முதலில் இந்த இரண்டு பயங்கரவாதங்களும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். தன்னிடம் உள்ள சகல வலிமைகளையும், இயலுமைகளையும் இந்த விடயத்தில் அரசு முழுமூச்சாகப் பயன்படுத்த வேண்டும். இன்னொரு வாசகத்திக் சொல்வதானால் இந்த இரண்டு பயங்கரவாத கும்பல்களுக்கும் எதிராக அரசாங்கம் போர்ப் பிரகடனம் செய்ய வேண்டும்.

ஆனால் இத்தரப்புகளை கையாளும் விவகாரத்தை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு முன்னெடுக்கவில்லை. மயிலிறகால் தடவுவது போல விடயங்களை மேற்கொள்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் அரசு தன்னுடைய படை வலிமையில் பெரும் பகுதியை வடக்கு, கிழக்கில்தான் - தமிழர் தாயகத்தில்தான் - குவித்து வைத்திருக்கிறது. அங்கு அரசுக்கு எதிராக கல்லெறியும் வன்முறை கூட இனி வெடிக்காது என்பது கொழும்பு ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். அரசுக்கு எதிரான தமிழர்களின் போராட்டம் அகிம்சை வழியில்தான் இனிக் கட்டவிழும். ஆனால் தமிழர் தாயகத்தின் மீது தனது ஆக்கிரமிப்பை - ஆளுமையை - மேலாதிக்கத்தை - நிலைநிறுத்திக் காட்டுவதற்காக தன்னுடைய படை வலிமையை எல்லை மீறி தமிழர் தாயகத்தில் சிங்கள அரசு குவித்து வைத்திருக்கிறது.

போதைப் பொருள் கும்பல்களினதும், பாதாள உலகம் குழுக்களினதும், பல்கலைக்கழக றாக்கிங் கொடூரர்களினதும் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தன்னுடைய பாதுகாப்பு வலிமையை போர்க்கால நிலைமை போன்று ஏவி விட வேண்டிய கொழும்பு, அதில் மெத்தனமாக இருந்து கொண்டு, தமிழர்தாயக ஆக்கிரமிப்புக்குத் தனது படை வலிமையை தொடர்ந்து பேணுகின்றது.

முட்டாள்தனமான அரசு நிர்வாகம் என்றுதான் இதைக் கூற வேண்டும்.



# நாளைய தினம் போர்க்கால ஒத்திகை நடத்த பல மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவு

எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், நாட்டு மக்களின் பாதுகாப்பு சார்ந்த போர்க்கால ஒத்திகையை மேற்கொள்ள பல மாநிலங்களுக்கு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, நாளை புதன்கிழமை இந்தப் பாதுகாப்பு ஒத்திகையை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த ஒத்திகையின்போது, வான்வழி தாக்குதல் குறித்த எச்சரிக்கை ஒலியை ஒலிக்கச் செய்து, மக்கள் தங்களை காத்துக்கொள்ளும் வழிமுறைகளை பின்பற்றச் செய்ய வேண்டும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு எதிராக அந்நிய இராணுவ சக்திகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் சூழல் ஏற்பட்டால், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது இந்தப் பாதுகாப்பு ஒத்திகை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, மாணவர்கள் மற்றும் மக்களைக் கொண்டு இந்தப் பாதுகாப்பு ஒத்திகையை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த ஒத்திகையின்போது ஏர் சைரனை ஒலிக்கச் செய்து மக்களை விழிப்படைய செய்வது, செடி கொடிகளுக்கு இடையே மறைந்து கொள்வது, மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான புதிய மேம்படுத்தப்பட்ட திட்டம் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்கள் இருக்கும் மத்திய உள்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், மீனவர்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கவும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை உடைத்து வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதை தடுக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“சமீப காலமாக இந்திய மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்த நபர்களால் தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. கடந்த மே 2 ஆம் திகதி நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 23 மீனவர்கள் மற்றும் அவர்களது 5 நாட்டுப் படகுகள் கடலில் அடையாளம் தெரியாத இலங்கையைச் சேர்ந்தவர்களால் வெவ்வேறு சம்பவங்களில் தாக்கப்பட்டனர்.

அவர்களின் ஜி.பி.எஸ். கருவிகள், கைப்பேசிகள், வி.எச்.எப் உபகரணங்கள், ஐஸ் பெட்டிகள், இயந்திர பாகங்கள், இன்வெர்ட்டர் பேட்டரிகள், அடுப்பு, சுமார் 470 கிலோ மீன்பிடி வலைகள், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் போன்ற தனிப்பட்ட உடைமைகளும் பறிக்கப்பட்டன. மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்கவும், தாக்குதல் நடத்தியவர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவும், இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தொடர்புடைய அதிகாரிகளிடம் இப்பிரச்சனையை எடுத்துச் சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் துறை பரிந்துரைக்கு ஏற்ப, செயற்கை பவளப்பாறை அமைப்புகளை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 34 மீன்பிடிப் படகுகளை உடைத்து கடலில் மூழ்கடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி படகுகளை நம்பியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு




இதனால் பேரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவும், தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை இலங்கை அரசு திரும்ப ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மே 5 ஆம் திகதி நிலவரப்படி, தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 229 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இலங்கை நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட 12 மீன்பிடி படகுகளுடன் 101 மீனவர்களையும், 14 மீட்புப் படகுகள் மூலம் இந்தியாவிற்கு கொண்டுவருவதற்கு ஏற்கனவே தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவிற்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் விரைவில் நடவடிக்கை எடுத்து உதவுமென்று நம்புகிறேன்.

இந்த முக்கியப் பிரச்சினைகளை இலங்கை அரசிடம் எடுத்துச் சென்று, இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்கவும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளை சேதப்படுத்தி கடலில் மூழ்கடிப்பதைத் தடுக்கவும், இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், 229 மீன்பிடிப் படகுகளையும் மீட்டுக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்க வேண்டும்.” என்று முதல்வர் ஸ்டாலின் அந்த கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.









# இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் திட்டம்: இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல்!

ஹமாஸ்க்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் பாதுகாப்பு அமைச்சரவை நேற்று முன்தினம் இரவு கூடி இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சியாகப் பல மாதங்களுக்குத் தரைவழித் தாக்குதல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு அமைச்சர்கள் ஏகமனதாக ஒப்புதல் அளித்துள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசாவை கைப்பற்றுவதும், கைப்பற்றிய பிரதேசங்களைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதும் இந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தசெயல்பாட்டிற்குஅமையஇஸ்ரேலிய இராணுவம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், பல்லாயிரக்கணக்கான விசேட துணை படையணிகளும் நிரந்தர சேவைக்காக அழைக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை மீட்பதுடன், ஹமாஸை தோற்கடிக்கும் நோக்கத்துடன், தொடர்ச்சியாக அழுத்தங்களை இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அடுத்த வாரம் சம்பந்தப்பட்ட பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னரே தாக்குதல்கள் முன்னெடுக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இஸ்ரேலிய அமைச்சரவை கொள்கையளவில் தொண்டு நிறுவனங்களினூடாக மனிதாபிமான உதவிகளை மீண்டும் வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, கடந்த இரு மாதங்களாக இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படும் முற்றுகையினை முடிவிற்குக் கொண்டு வருவதன் அவசியம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தி வருகிறது.

அதனைத் தவறும் பட்சத்தில் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள மக்கள் பாரிய உணவுப் பற்றாக்குறையினை எதிர்கொள்வர் என எச்சரிக்கப்பட்டுள்ளது.



# பாகிஸ்தானில் நிலநடுக்கம்!




பாகிஸ்தானில் நேற்று மாலை 4 மணியளவில் நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நில நடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

முன்னதாக, நேற்று காலை பாகிஸ்தானை சுற்றியுள்ள தஜிகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் அடுத்தடுத்து ஏற்படும் இந்த நிலநடுக்கத்தால் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்துமா தொற்று நோயல்ல!

## ஆஸ்துமா தினம் மே முதல் செவ்வாய்க்கிழமை இன்று



நடராஜன் ஹரன்

நாட்டில் தற்போது ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உலகளவில் ஒவ்வொரு 100,000 பேரில் 3,340 பேர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று களுபோவில போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகளவில் இளைஞர்களிடையே ஆஸ்துமா அதிகரித்துள்ளது. இன்ஹேலர் அடிப்படையில் சிகிச்சையானது பக்க விளைவுகளை ஏற்படுத்தாமல் ஆஸ்துமாவை திறம்பட நிர்வகிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் ஆஸ்துமா பரவலாக இருந்தாலும், நாட்டில் பல தனிநபர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர் என்று சுவாச நோய் வைத்திய நிபுணர் சமன்மலி தல்பதடு குறிப்பிட்டுள்ளார்

உலகம் முழுவதும் ஆஸ்துமா தினம் ஆண்டுதோறும் மே மாதம் முதல் செவ்வாய்கிழமை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆஸ்துமா நோய்க்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். ஜெனிவாவில் 1989 இல் 'உலக ஆஸ்துமா அமைப்பு' தொடங்கப்பட்டது. அது முதல், ஆஸ்துமா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை உலக ஆஸ்துமா தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவன கணக்கெடுப்பின்படி, 1992 இல் உலகளவில் சுமார் 15 கோடி பேர் ஆஸ்துமா நோயாளிகள். சுற்றுச்சூழல் மாசு, உணவு பழக்கம்இ மரபணு செயல்பாடு உள்ளிட்ட காரணங்களால் ஆஸ்துமா நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2010 இல் இந்த எண்ணிக்கை 30 கோடி. 15 - 50 வயதுக்கு உட்பட்ட 1,471 ஆஸ்துமா நோயாளிகள்இ ஆரோக்கியமான 864 பேரை வைத்து இங்கிலாந்தில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

அதிக பழம், காய்கறி சாப்பிடுவோர் ஆஸ்துமாவால் பெரிதும் பாதிக்கப்படுவதில்லை. வாரம் 3 ஆப்பிள் சாப்பிட்ட 32 வீதமான பேர், வாரம் 3 முறை வெங்காயம் சாப்பிட்ட 18 வீதமான பேர், தினமும் 2-3 முறை ரீ குடித்த 17 வீதமான பேருக்கு ஆஸ்துமா பாதிப்பு இல்லை என்று ஆய்வில் கண்டறியப்பட்டது. ஆஸ்துமா தொற்று நோய் இல்லை. பழகினால் பரவாது என்றும் உறுதிப்படுத்தப்பட்டது.

மூச்சுக் குழாயில் சுருக்கம் ஏற்படுத்தி, மூச்சு விட சிரமம் தரும் நோய்தான் ஆஸ்துமா. இது ஒருவித அலர்ஜி. ஆளுக்கு ஆள் வேறுபடும். தூசு, புகை, கரப்பான் பூச்சி கழிவு, சில பூஞ்சைகள், தை மாதப் பூக்களின் மகரந்தம், பனி ஆகியவற்றால் அலர்ஜி ஏற்படும். வேகமாக ஓடிவந்து நிற்கும்போதும் மாடிப் படிகளில் ஏறி இறங்கும்போதும் மூச்சு வாங்குவது ஆஸ்துமா இல்லை.

ஆஸ்துமா நோய் பரம்பரையாகவும் (மரபணு கோளாறு), சுற்றுச்சூழல் பாதிப்புகளாலும் ஏற்படுகிறது. பெரும்பாலும் சிகரெட் புகையாலும், காற்று மாசுபாட்டாலும் ஆஸ்துமா நோய் தாக்குகிறது.

மேலும், மாறி வரும் வாழ்க்கை முறைகளான பாஸ்பூட், உடலில் பவுடர் மற்றும் வாசனை திறவங்களை போடுவதால் ஆஸ்துமா ஏற்படுகிறது. ஆஸ்துமா நோயின் தன்மை மற்றும் நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்த முடியும். நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியாது. சரியான சிகிச்சை எடுத்துக்கொண்டால் நீண்ட நாள் வாழலாம்.

இந்த நோய்க்கு ஆண்டு தோறும் லட்சக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். கடந்த 10 ஆண்டில் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. ஆஸ்துமா நோய் நாட்டுக்கே பெரிய சவாலாக இருக்கிறது. பெரியவர்களை விட இளைஞர்கள் தான் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்றுநோய்களால் (வைரஸ் கிருமிகள்) நுரையீரல் பாதிக்கப்படுகிறது. இதனாலும், சுற்றுச்சூழல் பாதிப்புகளாலும் குழந்தைகள் சுவாசிக்க மிகவும் கஷ்டப்படுகின்றனர். நெஞ்சிலே சளி தங்கி விடுகிறது.

தொடர்ச்சி ▼

# ஆஸ்துமா தொற்று நோயல்ல!

**தொடர்ச்சி▲**

இதனால், குழந்தைகள் எளிதில் ஆஸ்துமா நோய்க்கு உள்ளாகின்றனர். மொத்த குழந்தைகள் எண்ணிக்கையில் 10 சதவீதம் குழந்தைகள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காசநோயால் பாதிக்கப்பட்டவர்களையும், சிகரெட் பழக்கம் உள்ளவர்களையும் ஆஸ்துமா எளிதில் தாக்கும். சிகரெட் பிடிப்பவர்கள் அருகில் இருந்தால்இ மூச்சு திணறல் ஏற்பட்டு ஆஸ்துமா நோய் தாக்க வாய்ப்புள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் கட்டாயம் நுரையீரல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

சரியான நேரத்தில் தவறாமல் மருந்துகளை எடுத்துக் கொள்வதும்இ அலர்ஜியை ஏற்படுத்தும் பொருள்களைத் தவிர்ப்பது போன்றவை நோயின் தாக்கத்தைக்க கட்டுப்படுத்தும் செயல்முறைகள் ஆகும். எனவே ஆஸ்துமாவில் இருந்து வருங்கால சமுதாயத்தை காக்க சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதும் அவசியமாகும்.

செல்லப்பிராணிகள் வேண்டாம் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகள் மூலம் அலர்ஜி ஏற்படும் வாய்ப்பு அதிகம் எனவே செல்லப் பிராணிகளை வீட்டில் வளர்ப்பதை தவிர்க்கலாம். அதேபோல் ஆஸ்துமா நோயாளிகளுக்கு சிகரெட் புகை அலர்ஜி ஏற்படுத்தக் கூடியது. எனவே வீட்டில் குழந்தைகளுக்கு ஆஸ்துமா பாதிப்பு இருந்தால் புகைப்பதை தவிர்ப்பது நலம்.

படுக்கை அறை தலையணைகளில், போர்வைகளில் அலர்ஜி ஏற்படுத்தும் நுண்ணியிரிகள் இருக்கலாம். எனவே அவற்றை அடிக்கடி நன்றாக அலசி, துவைத்து காயப்போட்டு உபயோகிக்க வேண்டும்.

ஒரு கர்ப்பிணிப் பெண், புகையிலை புகையைச் சுவாசிக்க நேரிடும் போது வயிற்றில் வளரும் குழந்தைக்கு எளிதில் ஆஸ்துமா வருகிறது. உடற்பருமனாகுதல் போன்றவை ஆஸ்துமாவின் பொதுவான காரணிகள். குழந்தைகளுக்கு வரும் ஆஸ்துமா பெரியவர்களுக்கு வருவதிலிருந்து மாறுபட்டது. குழந்தைகளுக்கு மூச்சுதிணறல், வீசிங், இருமல் மற்றும் மார்பு இறுக்கம் ஆகிய அறிகுறிகள் ஏற்படாது.

நாள்பட்ட மற்றும் தொடர் இருமல், வாந்தி வரும் வரை இருமல், இரவில் இருமல், மூச்சிரைப்பு, மூச்சுவிட முடியாமை, விளையாட அல்லது உடற்பயிற்சி செய்ய தொடங்கியதும் களைப்படைதல், வழக்கத்தைவிட விரைவாக சுவாசிப்பது, அதிக கோபமடைதல் ஆஸ்துமாவின் ஆரம்ப அறிகுறிகள்.

களைப்பாக இருக்கிறேன், இதயம் இறுக்கமாக இருக்கிறது, மூச்சுவிட கடினமாக உள்ளது, மூச்சுவிடும் போது ஒரு வினோதமான சத்தம் கேட்கிறது என, குழந்தைகள் கூறினால் மருத்துவரை அணுகுங்கள். தொடந்து மருந்தைப் பெற்று சுகமாக வாழ்வீர்!

---

# வவுனியா மாவட்டச் செயலகத்தினால் நேற்று ‘முரசு’ ஊடகவியலாளருக்கு அனுமதி மறுப்பு

## தமிழில் அனுப்பப்பட்ட கடிதத்தை சரியாக வாசிக்கத் தெரியாத அதிகாரிகள்


**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாவட்டச் செயலகத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல் செய்தி அறிக்கையிடலுக்கு “முரசு” பத்திரிகையின் ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தின் விவரம் வருமாறு:-

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான செய்தி அறிக்கையிடலுக்காக ஊடகவியலாளருக்கு அனுமதி வழங்குவதற்கு ஊடக நிறுவனங்களிடம் இருந்து கடிதங்கள் கோரப்பட்டிருந்தன. அதனடிப்படையில் முரசு (காலை முரசு, மாலை முரசு) பத்திரிகை சார்பாக வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் ஒருவருக்கு அனுமதிக் கடிதம் முரசு பத்திரிகையால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் முரசு தலைமை அலுவலகம் உள்ளதால் அந்தக் கடிதத்தில் திகதி, அதன் பின் யாழ்ப்பாணம் என முகவரி இடம் குறிப்பிட்டு, “தெரிவத்தாட்சி அலுவலர், வவுனியா மாவட்டம்“ எனத் விளித்து, அவருக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.




அந்தக் கடிதத்தைப் பார்த்த வவுனியா மாவட்ட செயலக ஊடகத் தொடர்பாடல் உத்தியோகத்தர் உப்புல் பால சூரிய மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் ஆகியோர் அந்தக் கடிதம் வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுதப்படவில்லை, அது யாழ்ப்பாணத்திற்கு எழுதப்பட்டுள்ளது என தெரிவித்து குறித்த ஊடகவியலாளருக்கான அனுமதி அட்டையை வழங்க மறுத்திருந்தனர்.

குறித்த ஊடகவியலாளர் விடயத்தை தெளிவுபடுத்திய போதும் அவர்கள் இருவரும் அனுமதி அட்டையை வழங்கியிருக்கவில்லை.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கையின் போதான பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும், மோப்ப நாய் சோதனை நடவடிக்கை தொடர்பிலும் சில சிங்கள மொழி ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்த நிலையில், எமக்கு ஏன் அதைத் தெரியப்படுத்தவில்லை என ஊடகத் தொடர்பாடல் உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆகியோரிடம் நேற்று மதியம் அந்த ஊடகவியலாளர் கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதையடுத்தே அவருக்கு ஊடக அனுமதி வழங்காமல் தவிர்க்க இப்படி சாக்குப் போக்குக் காரணம் கூறப்பட்டிருக்கின்றது.



# சிறிசபாரத்தினம் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் சிறிரெலோவினால் இரத்ததானம்

(கி.வசந்தன்)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரத்தினத்தின் 39 ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வவுனியா பொதுவைத்தியசாலை இரத்த வங்கியில் நேற்றைய தினம் இரத்த தானம் இடம்பெற்றது.

“உதிரம் கொடுப்போம் – உயிர் காப்போம்“ எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் சிறி தமிழ் ஈழ விடுதலை (சிறிரெலோ) இயக்கத்தின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த இரத்ததான முகாமில் 15க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.














# மாத்தளன் நந்திக்கடல் களப்பில் இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(பா.சதீசன்)

மாத்தளன் நந்திகடல் களப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையை வசிப்பிடமாக கொண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் மூன்று நாள்களாகக் காணாமல் போயுள்ளார். உறவினர்கள் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்றையதினம் நந்திக்கடல் களப்பில் சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ராஜசீலன் ராஜ்குமார் எனும் அம்பலவன் பொக்கணையை சேர்ந்த

27 வயதுடையவரான – ஆறுமாத பெண்குழந்தையின் தந்தையே – இவ்வாறு சடலமாக மீட்டகப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் நேரடியாக சென்று பார்வையிட்டார். சடலத்தை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து சென்று உடற்கூற்று பரிசாதனை செய்த பின்னர் உறவினர்களிடம் கையளிக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில் ஈஸ்வராம்பாள் தினமும், பாலவிகாஷ் பொன்விழா நிகழ்வும்





அன்னை சாயி ஈஸ்வராம்பாள் ஞாபகார்த்த தினமும், சாயி பால விகாஷ் அறநெறி பாடசாலையின் 50ஆவது ஆண்டு பூர்த்தி பொன் விழாவும், கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது, பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி ஓய்வு நிலை அதிபரும் சாயி அறநெறி பாடசாலையின் தற்போதைய தலைமை ஆசிரியருமான எஸ். கருப்பையா, பிரதம அறங்காவலரை கௌரவித்தார்.

சாயி மகளிர் பிரிவின் தலைவி சர்வகுணதேவி சண்முகநாதன், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் சார்பில் சியாமளா ரவிச்சந்திரனால் கௌரவிக்கப்படுகின்றமையையும், 2025 ஆண்டின் சிறந்த மாணவியான செல்வி ஸ்வஸ்திகா ஜீவரட்டிணத்தை சாயி நிலைய தலைவர் தலைவர் எஸ். என். உதயநாயகம் கௌரவிக்கின்றமையையும், சாயி அறங்காவலர் சபை பொதுச் செயலாளர் சிவா இராஜஜோதி மற்றும் அதிபர், ஆசிரியர்கள் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் இடம்பெற்ற கலை நிகழ்வையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.





# ஐரோப்பிய ஒன்றியக் குழுவினருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பேச்சு

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தலைமையிலான இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரக் குழுவினருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் திரு. லார்ஸ் பிரெடெல், ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி திரு.கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி திருமதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி திரு. பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டாச்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி திருமதி மைக்கேல் டோடினி உள்ளிட்டவர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இங்கு, இரு தரப்பினரும் நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தினர். மேலும், ஜி.எஸ்.பி.பிளஸ் வரி சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருள்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44 வீத பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் காவிந்த ஜயவர்தன, எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம, பேராசிரியர் கெணடி குணவர்தன, பேராசிரியர் திருமதி சந்திமா விஜேகுணவர்தன, கலாநிதி மஹிம் மெண்டிஸ், கலாநிதி அதுலசிறி சமரகோன், கலாநிதி நதீஷா டி சில்வா, சுரங்க ரணசிங்க, குசும் விஜேதிலக மற்றும் திலும் அழகியவன்ன ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.













# இன்றைய ராசி பலன்கள் - 06.05.2025




இன்று வெற்றிகரமான நாள் என்ப தால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக் கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கிய மான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணி யின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர் கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணை யுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப் படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச் சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




ஆன்மீகத்துக்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள்காணப்படும்.இதுஉங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணி களை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்-த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிக வும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே யான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக் கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக் கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்தி கரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




கன்னி

இன்று மகிழ் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணி களை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடு படுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்க லாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவன மாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக் காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதி யாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி யிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவு களை இன்று எடுப்பது உசிதமல்ல.

# இன்றைய ராசி பலன்கள் - 06.05.2025




தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பரா மரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத் தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்பட லாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும்.




உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந் துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக் கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்பட லாம்.




உங்களுக்கு பயன் தரும் வகை யிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத் துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களி டம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்க ளுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்காது. பணியில் ஏற்படும் தவறு களால் கவலை கொள்வீர்கள். எச்சரிக்கை தேவை.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணை யுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. இன்று பணத்தை சிறப்பாக கையாள முடியாத சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.

# அச்சுவேலி சீர்திருத்தப் பள்ளியில் இருந்து தப்பி வந்த மாணவன் வவுனியா ஊடகவியலாளர்களினால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

**(கி.வசந்தன்)**

யாழ், அச்சுவேலி சீர்திருத்தப் பள்ளி யில் இருந்து தப்பி வந்த 17 வயது மாணவன் வவுனியா பொலிஸாரிடம் நேற்று இரவு ஒப்படைக்கப்பட்டார்.

சீர்திருத்தப் பள்ளியில் இருந்து தப்பி மாணவன் வவுனியாவில் உள்ள தனது நண்பர் ஒருவரிடம் தொடர்பு கொண்டு வவுனியாவிற்கு வந்துள்ளார். ஆனால் வவுனியாவிற்கு வந்த பின் நண்பன் தொடர்பு கொள்ளவில்லை.

இந்நிலையில் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய போது, வவுனியா ஊடகவியலாளர் இருவருக்கு இது தொடர்பில் அப் பகுதியில் இருந்த வர்கள் தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற ஊடகவிய லாளர்கள் அந்த மாணவனுடன் மேற் கொண்ட உரையாடல்களின் போது மாணவன் அச்சுவேலி பகுதியில் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் இருந்து தப்பி வந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து, இரு மாணவர்கள் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் இருந்து தப்பிச் சென்றமையை அச்சுவேலிப் பொலிஸா ஊடாக உறுப்படுத்திய ஊடகவியலாளர்கள், வவுனியாவிற்கு தப்பி வந்த மாணவனை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# வவுனியாவில் வேட்பாளர் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் எனப் புகார்

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் வேட்பாளர் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தாக வவுனியா பொலிஸ் நிலை யத்தில் நேற்று முறைப்பாடு செய் துள்ளார்.

வவுனியா மாநகரசபையில், வைரவ புளியங்குளம் வட்டாரத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பா ளர் ஒருவரே தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய் துள்ளார்.




இது தொடர்பில் வவுனியா பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.